**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.358/2021 பி.வா.சா.1 முத்துச்சாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 24.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

3) எனக்கும் என் மனைவி ராதாமணிக்கும் மாண்புமிகு உடுமலை சார்பு நீதிமன்ற HMOP No.31/1982 மூலமாக பரஸ்பர விவாகரத்து ஆனது என்றால் சரிதான். அந்த விவாகரத்து உத்தரவு வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விவாகரத்து தாக்கல் செய்ய யார் முதலில் வழக்கறிஞரை அணுகியது என்றால் இருவரும் மனம் ஒத்து சேர்ந்து அணுகினோம். மேற்படி விவாகரத்து மனுவின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து மனுவை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து மனுவிலும் உத்தரவிலும் நாங்கள் இருவரும் 10 மாத காலம் மகிழ்ச்சியாக உடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 மாதத்திலேயே பிரிந்து விட்டோம். நாங்கள் 2 மாதம் மட்டுமே சேர்ந்து வாழ்ந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

4) மேற்படி உத்தரவில் எனக்கும் ராதாமணிக்கும் ஒரு மகன் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்ட போது வாதி மேற்படி ராதாமணியின் அரவணைப்பில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராதாமணி கருவுற்ற பின் தன் பெற்றோருடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். அச்சமயம் தான் எங்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டது என்றால் சரிதான்.

5) என் எதிர்வழக்குரையிலோ, என் சாட்சிய வாக்குமூலத்திலோ வாதி எனக்கும் ராதாமணிக்கும் பிறக்கவில்லை என்று எங்கும் கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் பதிவு திருமணம் ஏற்பட்டது என்றால் திருமணம் நடந்தது போல பதிவு செய்யப்பட்டது . அத்திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரியல்ல. மேற்படியோரின் திருமண பதிவு சான்று வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சான்றில் "*இந்து மத குலவழக்கப்படி வீட்டுக்கு வேண்டிய மேற்படி தலம் 5 உள்ள நபர் தாலி எடுத்து கொடுத்து மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டி மனம் முடிக்கப்பட்டது* " என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . ஆனால் அது தவறாகும் .

6) 4ம் மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ. 3 மற்றும் பி.வா.சா.ஆ. 4 பிறப்பு சான்றுகளில் பிறந்தவர் பெயர் இல்லை என்றால் சரிதான். அச்சமயம் குழந்தை பெயர் வைக்கப்படாததால் குறிப்பிடவில்லை .ஆனால் நான் தந்தை என கையொப்பம் இட்டு உள்ளேன். வாதிக்கு சொத்து கிடைக்க கூடாது என்பதற்காக 4ம் மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர்கள் என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 திருமண சான்று படி 2ம் பிரதிவாதிக்கும் , 3ம் பிரதிவாதிக்குமே திருமணம் நடந்தது என்றும் அவர்களுக்கு தான் 4 , 5 பிரதிவாதிகள் பிறந்தனர் என்றும் அதனால் 4, 5 பிரதிவாதிகள் என் வாரிசுகள் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

7) அதனால் 4, 5 பிரதிவாதிகள் பெயரில் நான் ஏற்படுத்திய தான சாசனங்கள் செல்லாது என்றால் சரியல்ல. அவை நான் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் ஆகும். என்

எதிர்வழக்குரையிலும் , என் சாட்சிய வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு உள்ள சங்கதிகள் வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல.

(**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**)

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி